செ.வெ.எண்: 34 நாள்: 26.04.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 201 ஊராட்சிகளிலும் **தொழிலாளர் தினமான 01.05.2017 அன்று "கிராமசபைக் கூட்டம்"** நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல் குறித்தும், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும், கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம் (VPDP) குறித்தும், அந்தியோதயா இயக்கம் குறித்தும், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்தும், திட்ட அறிக்கை குறித்தும், திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள் குறித்தும், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல், குழுக்களுக்கு ஒத்துழைப்பு நல்குவது குறித்தும், கழிப்பறை இல்லாதோர் விவரப் பட்டியல் குறித்தும், திறந்த வெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள் குறித்தும், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் குறித்தும், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மைய கழிப்பறைகள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை குறித்தும், மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் குறித்தும், 2017-18ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதி திட்டத்தின்படி பணி விவரம் குறித்தும், அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சி கூட்டம் குறித்தும், 2016-17ஆம் ஆண்டு நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்தும், மகளிர் திட்டம் குறித்தும் மற்றும் புதுவாழ்வு திட்டம் VPRC (K) PLF செயல்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்படும்.

பொதுமக்கள் மற்றும் ஊராட்சி செயலர்களால் கொண்டுவரப்படும் இதர பொருட்கள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்படவுள்ளதால், அந்தந்த பகுதிகளில் உள்ள பாராளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் திரளாக கிராமசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**